பக்கங்கள்: பத்து

Nallur Branch Library

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 13 புதன்கிழமை (25-02-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 77

# கரிப்பட்டமுறிப்பில் நேற்று கடுஞ்சமர்

## ஐம்பது படையினர் பலியாம் 20 சடலங்கள் புலிகள் வசம்

வவுனியா, பெப்ரவரி 25

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசுப் படைகள் நேற்றுக் காலை 5 மணி முதல் கரிப்பட்டமுறிப்புப் பகுதியிலிருந்து ஒலுமடு நோக்கி முன்னேற எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்து விட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அங்கு நடந்த கடுஞ் சமரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததாகவும், பல நூறு படையினர் காயமடைந்ததாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இச்சண்டையில் உயிரிழந்த இருபது படையினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும்—

படையினரின் மேலும் பல சடலங்கள் சிதைவடைந்துள்ளதால் அவை உரிய மரியாதைகளுடன் புலிகளால் தகனம் செய்யப்படவுள்ளன என்றும்—

இத் தாக்குதலில் சுமார் முப்பது தானியங்கி ஆயுதங்கள், பத்தாயிரம் ரவைகள் உட்பட பெரும் தொகையான ஆயுதத் தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர் என்றும்—

புலிகளின் குரல் மேலும் அறிவித்தது.

கைப்பற்றப்பட்ட படையினரின் இருபது சடலங்களையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தைப் பிடிக்க இறுதிச் சமர் ஆரம்பம்

வவுனியா, பெப். 25

புளியங்குளம், கனகராயன் குளம் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான இறுதிக் கட்டச் சமரை நேற்றுக்காலை ஆரம்பித்ததாக யுத்தமுனையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மாங்குளத்துக்குத்தெற்கே கொல்லர் புளியங்குளத்தில் நிலை கொண்டிருந்த படையினர் நேற்றுக் காலை 4 மணியளவில் மாங்குளத்தை நோக்கி தமது நகர்வை ஆரம்பித்ததுடன் அப்பகுதியில் கடுஞ் சமர் வெடித்தது. காலை 5–20 மணிக்கு உச்சக் கட்டத்தை அடைந்த சமர் நண்பகல் 12–45 மணிவரை நீடித்தது.

நேற்றைய சமரில் ஷெல் வீச்சுக்கள் உக்கிரமாக இருந்தன.

கனகராயன் குளத்துக்கு அருகில் வீழ்ந்த ஷெல்களினால் ஆறு படையினர் உயிரிழந்தனர் என்றும் —

அறுபது படையினர் வரை காயமடைந்தனர் என்றும்

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய சமரில் காயமடைந்த 90 படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வட–மத்திய மாகாண சுகாதாரசேவை அதிகாரி ஒருவர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 2 படையினர் பலி!

கொழும்பு, பெப். 25

திருகோணமலை கந்தளாய் வாவிப் பகுதியிலும் தம்பலகமம் — கிண்ணியா வீதியிலும் நேற்று அதிகாலையும், நேற்று முன் தினம் மாலையும் இடம்பெற்ற இரு தாக்குதல் சம்பவங்களில் 2 படையினர் உயிரிழந்தனர்.

(உ–7–8–21)

## ஊடுருவல்?

கொழும்பு, பெப். 25

நேற்றுக் காலை 7. 30 மணிக்கு கொழும்புத் துறை முகத்துக்குள் தெற்கு வழியாக நீந்தி ஊடுருவ முயன்ற இருவர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் அப் பகுதிக்கு கடற்படையினர் பத்துப் படகுகளில் விரைந்து சென்று சுழியோடித் தேடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் யாழ். அரச அதிபரை விடுதலை செய்து நேற்று தீர்ப்பு!

கொழும்பு, பெப். 25

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட முன்னாள் யாழ். அரச அதிபர் செல்லையா பத்மநாதன் மேல் நீதிமன்ற நீதியரசர் ஷிரானி திலகவர்த்தனாவால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவர்களான புத்திர சிகாமணி, பண்டிதர், கே. ராஜா ஆகியோர் தொடர்பான தகவல்களை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பத்மநாதனுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நேற்று மேல் நீதிமன்ற நீதியரசர் திருமதி ஷிரானி திலகவர்த்தன முன்னிலையில் எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இந்த வழக்கை தொடர்ந்து நடத்த சாட்சியங்களும் இல்லை; ஆதாரங்களும் இல்லை; ஆகவே வழக்கை வாபஸ் பெறுவதாக தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், நல்லூரில் ஊரடங்கு இன்று நீக்கம்!

யாழ்ப்பாணம், பெப். 25

மகா சிவராத்திரி தினத்தை ஒட்டி யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இன்றிரவு ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டிருக்கும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சங்கானை உதவி அரச அதிபர் பிரிவுகளில் இன்றைய தினம் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டிருக்கும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ)

## மூழ்கிய 'பவ்வத்த' கப்பலை மீட்பதற்குத் தீவிர முயற்சி!

கொழும்பு, பெப். 25

கடந்த ஞாயிறு இரவு பருத்தித்துறைக் கடலில் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் மூழ்கிய— கடற்படையின்— 'பவ்வத்த' கப்பலை மீட்பதற்கு அரசுத் தரப்பு தீவிர முயற்சி எடுப்பதாகத் தெரிகின்றது. கடல் மட்டத்திலிருந்து 17 மீற்றர் ஆழத்தில் இக்கப்பல் தாண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலுடன் நீரில் அமிழ்ந்துள்ள இரு டாங்கிகளையும் கப்பலுடன் சேர்த்து மீட்க முடியாவிட்டால், சுழியோடிகள் மூலம் டாங்கிகளின் முக்கிய உதிரிப் பாகங்களையாவது கழற்றிக்கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கப்படுகின்றதாம்.

'வலம்புரி' கப்பல் கடல் சுழியால் இழுத்துச் செல்லப்பட்டு விட்டதால் அது மூழ்கிய இடத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–3–21)

## நான்கு படையினர் நேற்று நாகப்பட்டணத்தில் மீட்பு!

கொழும்பு, பெப். 25

வலம்புரிக் கப்பலில் இருந்த நான்கு இராணுவத்தினர் தகர்க்கப்பட்ட 'வலம்புரிக் கப்பலின் உடைந்த பாகம் ஒன்றைப் பிடித்தவாறு நாகப்பட்டணம் கரையை அடைந்திருக்கின்றனர். தமிழக மீனவர்கள் இவர்களை காப்பாற்றி கரை சேர்த்தனர்.

இதேசமயம் மற்றொரு சிவிலியன் ஊழியரும் சிப்பாயும் பாதுகாப்பாக நேற்று பருத்தித்துறை படை முகாமை வந்தடைந்தனர். அப்பகுதி பொதுமக்கள் அவர்களை உபசரித்து உதவியதாக பாதுகாப்பு வட்டார அறிக்கைகள் தெரிவித்தன.

கப்பல்கள் தகர்க்கப்பட்ட பிரதேசத்தில் இது வரை 12 சடலங்கள் மீட்கப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது. அவற்றில் ஒன்று 'பவ்வத்த' கப்பலின் இரண்டாவது கமாண்டர் லெப்டினன்ட் கே. எல். அலுத்கேயினுடையது என அடையாளம் காணப்பட்டது. (உ-3-21)

## கட்டுவன் வில்லவில் 16 பொலீஸார் பலி!

யாழ்ப்பாணம், பெப். 25

மட்டக்களப்பில் கட்டுவன் வில்ல பொலீஸ் நிலையம் மீது நேற்றுக் காலை 7–15 மணிக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 16க்கும் மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

10 நிமிட நேரத் தாக்குதலில் பொலீஸ் நிலையத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததாகவும் —

தமது தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்றும் —

'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் 'புலிகளின் குரல்' குறிப்பிட்டது.

அநுராதபுரம் — பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லையில் மணலாறை அண்டியுள்ள கட்டுவன்வில்ல என்ற இடத்தில் இருந்த காவல் நிலையம் மீதே தாக்குதல் இடம்பெற்றதாகவும்—

புலிகளால் அந்த நிலையம் கைப்பற்றப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டதாகவும் —

ஐந்து ஊர்காவலரும், ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் பயணிகள் கப்பல்

கொழும்பு, பெப். 25

திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவையை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடந்த விசேட கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தச் சேவையை நடத்த விருப்பம் தெரிவித்துள்ள இரு கப்பல் நிறுவனங்களும் சேவையை நடத்த வசதியாக அவற்றுக்கான அனுமதி நேற்றைய கூட்டத்தில் வழங்கப்பட்டது.

பெரும்பாலும் இச்சேவை அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படலாம் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சங்கானை நிகரை

## ஞான வைரவர் கோயில்
## அலங்கார திருவிழா உற்சவம்

நிகழும் மாசித் திங்கள் 13ஆம் நாள் (25-02-98) புதன்கிழமை ஆரம்பமாகி 14 தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்று, 15ஆம் திருவிழா மாசிமகத் தினத்தன்று சங்காபிஷேகம் நடைபெறும்.

அத்தருணத்தில் அடியார்கள் அனைவரும் வருகை தந்து பெருமானின் அருட்கடாச்ச பெறு பேறுகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

- பரிபாலன சபை

(53633)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## சகலவர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்

26-02-1998 இல் வியாழக்கிழமை சிவராத்திரி தினத்திற்காக சகல வர்த்தக நிறுவனங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

[சி/2962]

## A/L 97 Day Class
## புதிய பிரிவு-II

பொருளியல்: திரு. சண்
கணக்கியல்: திரு. நித்தியானந்தராஜா
வர்த்தகம்: திரு. முரளி
அளவையியல்: திரு. S. P. சர்மா
வ. புள்ளிவிவரவியல்: திரு. திரிகரன்

ஆரம்பம்: 27-02-97 (10 மணி)
N. C. C. A. யாழ்ப்பாணம்.

ஃ பொருளியல் வினாவிடை பகுதி II செவ்வாய், வியாழன் 12-00 மணிக்கு நடைபெறுகின்றது.

(49968)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### கணபதி சிவனடியான்

தோற்றம்: 19 - 03 - 1927
மறைவு: 26 - 01 - 1998

எல்லோரையும் அன்புடன் நேசித்தீர்கள்.
எல்லோருக்கும் உதவுவதில் முன்னின்றீர்கள்.
பாசமுடன் எங்களுடன் வாழ்ந்தீர்கள்.
பாதியிலே எம்மைவிட்டு பிரிந்ததேனோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிகிரியைகள் 25 - 2 - 98 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். ஆதலால் இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

தகவல்:
சி. நடராசா
(மகன்)

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(53640)

## இன்று விபூதித் திருநாள்

யாழ். மறை மாவட்டத்தில் உள்ள சகல கத்தோலிக்க ஆலயங்களிலும் இன்று விபூதித் திருநாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இன்று தவக்கால ஆரம்ப நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-30)

## கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 25

வடக்கு—கிழக்கு மாகாண சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் கலைஞர்களை கௌரவிக்கும்நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வடமராட்சி கிழக்கு கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருதங்கேணி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு நாகர் கோயில் ஆலய முன்றலில் நடைபெறும் என்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் சி. பசுபதி தெரிவித்துள்ளார். (இ-4)

## தேவை

உதயம் கடைக்கு உடன் ஆள் தேவை. சகலதும் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**உதயம்**

இல. 172, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(53638)

## எஸ். ஆர். சினிமா

கரவெட்டி.
(அம்பம் வைத்தியசாலைக்கு அண்மையில்.)

புதன் முதல்
பிரபுதேவா, மீனா
நடித்த
**நாம் இருவர் நமக்கு இருவர்**

காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2959)

நெல்லியடி

## மஹாத்மா

வெண் திரையில்
திங்கள் முதல்
அர்ஜுன், சிம்ரான்
நடித்த
**கொண்டாட்டம்**
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.
35 அடி அகலத் திரையில்
புதன் தொடக்கம்
ஞாயிறு வரையும்
முரளி — சுபலட்சுமி
நடித்த
**தினந்தோறும்**
(புதிய வெளியீடு)
பழைய நேரம்
10-30, 2-30
சிவராத்திரியை முன்னிட்டு
இன்று இரவு
8-30 மணிக்கு
T. ராஜேந்திரன் நடித்த
தாய் தங்கை பாசம்
12-30 மணிக்கு
பார்த்திபன் நடித்த
பாரதி கண்ணம்மா
(53059)

## யாழ். நீதிமன்றங்களுக்கு 45 எழுதுவினைஞர் நியமனம்

### 10-ம் திகதி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 25

வடமாகாண நீதிமன்றங்களில் கடமையாற்றுவதற்கென 45 எழுதுவினைஞர்களுக்கான நேர்முகத் தேர்வு அடுத்த மாதம் 10 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எழுதுவினைஞர்களை நியமிப்பதற்காக பொது நிர்வாக அமைச்சின் கீழுள்ள இணைந்த சேவைகள் பணிப்பாளரினால் 45 பேரடங்கிய பட்டியல் ஒன்று நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, யாழ். நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட பட்டியல்களில் உள்ளவர்களுக்கு அவர்களின் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதற்கான நேர்முகத் தேர்வுக்கு மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் சமுகமளிக்குமாறு தெரிவித்து யாழ். மாவட்ட நீதிவான் பா. பாலச்சந்திரன் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

(உ-5)

## சுனில் ஆட்ஸ்

**09-02-98** வரை ஒப்படைத்த படச் சுருள்களின் படங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி/2965)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விசுவப்பிள்ளை பொன்னம்மா

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த விசுவப்பிள்ளை பொன்னம்மா 24 - 02 - 1998 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விசுவப்பிள்ளை (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் P. W. D.) யின் அன்பு மனைவியும், விமலாம்பாள் (ஆசிரியை பு. கட்டுவன் த. க. பா.), லோகாம்பாள், வேலாயுதம் (C. T. B. பிராந்திய காரியாலயம்), ஜெயகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தசாமி (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கனகநாயகம் (யாழ். ப. நோ. கூ. சங்க வர்த்தக முகாமையாளர்), நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருச்செல்வம், ஞானச்செல்வம், சோமசுந்தரம், சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், மீனலோசனி (கனடா), கஜரூபன், சித்திரா (வ. ம. ம. வித்தி.), கலைவாணி, சியாமளா, உமாகாந்தி, ரமணன் (வன்னி), பிரணவநந்தன் (பரி. ஜோ. கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் சாதனா (கனடா) வின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 25- 2- 98 காலை 10. 00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் விலங்கன் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
வி. வேலாயுதம்
(மகன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.
(53642)

### லட்சுமி சிதம்பரப்பிள்ளை

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லட்சுமி சிதம்பரப்பிள்ளை 24-02-1998 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை (சிதம்பரப்பிள்ளை ஸ்ரோர்ஸ், ஏழாலை) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தமல்லிகா, சந்திரன் (ஆசிரியர், வவுனியா) சாரதர், சாந்தா, சுகந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், K. N. ராஜரட்ணம் (வனிக்கா மெடிக்கல்ஸ்), தனேஸ்வரி, விவேகானந்தன், மகேந்திரன், தர்மராஜா (ஆனந்தன் மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரூஜன் (லண்டன்), கஜன் (கொழும்பு). யாழினி, லோஜினி, புவித்திரா (கனடா), சுஜானி, ஜட்சினி, சுவர்ணன், சுஜீவன், நிவேதனா சரண்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-2-98) புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் காரைக் காட்டு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. மகேந்திரன்,
சி. விவேகானந்தன்,
த. தர்மராஜா
(மருமக்கள்)

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(53637)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவை சம்பவத்தில் மனித வெடிகுண்டு!

## ஆய்வுக்குழு தெரிவிப்பு

சென்னை, பெப். 25

கோவையில் பெப்ரவரி 14 ஆம் திகதி நடந்த வெடி குண்டு சம்பவங்கள் அத்வானியைக் குறி வைத்து நடத்தப்பட்டவை. மனித வெடி குண்டினால் இருவர் உயிரிழந்தனர் என்பதற்கு நேரில் பார்த்த சாட்சியம் உள்ளது இப்படி பாரதீய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சி சார்பில் கோவை சென்ற ஆய்வுக்குழு கடந்த வியாழக்கிழமை சென்னை திரும்பியது.

அக்குழுவில் இடம் பெற்றிருந்த பாரதீய ஜனதாக் கட்சியின் அகில இந்திய துணைத்தலைவர்கள் ஜனா. கிருஷ்ணமூர்த்தி, கே. ஆர். மல்கானி ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அத்வானியைக் குறி வைத்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெறவில்லை என்று முதல்வர் கூறுவது தவறு- அத்வானி பேச இருந்த மேடைக்கு 200 அடி தூரத்தில் முதல் வெடிகுண்டு வெடித்தது.

அத்வானி பேச இருந்த கூட்டத்துக்கு அருகே சந்தேகத்துக்கு இடமளிக்கும் விதத்தில் இருந்த ஓர் இளைஞரை விசாரித்துக் கொண்டிருந்த போது அவர் திடீரென்று ஓடினார். ஓடிய இளைஞர் வெடித்துச் சிதறினார் என்று அந்தோனி செல்வராஜ் என்ற பொலீஸ் அதிகாரி பா.ஜ.க. பொதுச் செயலாளர் எச். ராஜாவிடம் கூறியுள்ளார். அவரது கூற்றின்படி அத்வானியைக் கொல்ல மனித வெடி குண்டு வந்திருப்பது தெரிய வருகிறது.

இதேபோல துப்பாக்கிக் குண்டு காயத்துடன் ஓர் இளைஞர் கோவை அரசினர் மருத்துவமனையில் இருப்பதாக டாக்டர்கள் கூறினர். அப்படியானால் அன்றையதினம் பொலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்களா?

காயமடைந்த சிலர் பீதியின் காரணமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெறுவதற்கு வரத் தயங்குகிறார்கள்.

கோவை வெடிகுண்டுச் சம்பவங்கள் குறித்த உண்மையை முதல்வர் மறைக்க முயல்கிறார். கோவையில் உரிய பாதுகாப்பு அளிக்கத் தவறியதற்கு முதல்வர் கருணாநிதி மன்னிப்புக் கேட்க வேண்டும்.

கோவைத்தேர்தலை ஒத்திவைத்து விட்டால் அது தீவிரவாதத்துக்குக் கிடைத்த வெற்றியாகி விடும். எனவே தேர்தலை நடத்த அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்படித் தெரிவித்தார்.

# கல்யாண்சிங் அரசு

# பெரும்பான்மையை நிரூபிக்க நாளை வரை அவகாசம்

உத்தரப் பிரதேச முதலமைச்சராக கல்யாண்சிங்கை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு அலகாபாத் உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவை எதிர்த்து லோகக் தந்திர காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகதாம்பிகாபானல் தாக்கல் செய்திருந்த சிறப்பு அனுமதி ஒன்று குறித்த விசாரணையை மேல் நீதிமன்றம் எதிர்வரும் வெள்ளி வரை ஒத்திவைத்துள்ளது.

வெள்ளிக்கிழமைக்கு முன் கல்யாண்சிங் மற்றும் ஜெகதாம்பிகாபானல் ஆகிய இருவரும் தத்தமது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டும் பொருட்டு இந்த இருவருக்கும் இந்தவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் மேல் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தலைமை நீதிபதி எமம் புன்சி மற்றும் நீதிபதிகளான எஸ். வி அகர்வாய், கே. பி. தோமஸ் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு இந்த மனு குறித்த விசாரணையை நடத்தியது.

உத்தரப் பிரதேச ஆளுநரின் உத்தரவை நிறுத்தி வைத்ததற்கான காரணங்கள் எதனையும் முன்வைக்காமலேயே ஆளுநரின் ஆணையை நிறுத்திவைத்த உயர் நீதிமன்றம் தவறு இழைத்திருப்பதாக ஜெக் தாம்பிகாபானல் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் உத்தரப்பிரதேச சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் பலப் பரீட்சைக்காக நாளை கூட்டப்பட இருக்கிறது.

நாளை சட்ட சபை கூடும் போது கல்யாண்சிங் அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியதாக இருக்கும். (இ–7)

# வேட்பாளர் உட்பட ஐவர் பீகாரில் சுட்டுக் கொலை

புதுடில்லி, பெப். 25

பீஹார் மாநிலம் மோத்தீகரித் தொகுதியில் சமாஜிவாதக்கட்சி சார்பில் போட்டியிடும் தவவேந்திரநாத்துபே என்பவரும் சமாஜிவாதக் கட்சித் தொண்டர்கள் 4 பேரும் நேற்று அதிகாலை இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

மோத்தீகரி மாவட்டத்தில் உள்ள பரிபாயூர் கிராமத்தில் நேற்று அதிகாலை ஜீப் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயத்திலேயே இவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மோத்தீகரி மாவட்ட சிவில் அதிகாரிகளும், பொலீஸ் திகாரிகளும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர். [இ-7[

## மீண்டும் காட்டுத் தீ!

சிங்கப்பூர், பெப். 25

இந்தோனேசியாவின் போர்ணியோ தீவில் காட்டுத் தீ பரவி வருகிறது.

இதனால் சுமார் 14 ஹெக்டேயர் நிலப்பரப்பு நாசமாகியுள்ளது.

இந்தத் தீயினால் கடுமையான புகை மூட்டம் ஏற்பட்டுள்ளது என்றும்— அதைத் தொடர்ந்து சாமரிண்டா விமான நிலையம் சுமார் ஏழுமணி நேரம் மூடப்பட்டது என்றும்—தெரிவிக்கப் பட்டது. (இ-9)

# அல்ஜீரியாவில் குண்டு வெடிப்பு எரிவாயுக்குழாய் தகர்ப்பு

அல்ஜியேர்ஸ், பெப். 25

அல்ஜீரியாவில் எரி வாயு ஏற்றுமதி செய்யும் முக்கிய முனையில் உள்ள விநியோகக் குழாய் ஒன்று குண்டுகளால் தகர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு எந்தக் குழுவும் உரிமை கோரவில்லை.

இக் குண்டுத் தாக்குதலால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. (இ–9)

## 16 பேர் பலி

புதுடில்லி, பெப். 25

கேரளத்தில் மணப்பெண்ணை ஏற்றிச்சென்ற ஜீப் பஸ் ஒன்றுடன் மோதியதில் 16 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

# ரணிலைச் சந்தித்து நீண்டநேரம் உரையாடிய ராஜன் ஆசீர்வாதம்

கொழும்பு, பெப், 25

ஒரு காலத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் நெருங்கிய ஆதரவாளராக விளங்கிய ராஜன் ஆசீர்வாதம் கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து நீண்— நேரம் கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட முன்னர் அவரின் கணக்கு வி—யங்களை ராஜன் ஆசீர்வாதமே கவனித்துவந்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் பேராசிரியர் ஜி. எல். பீரிஸையும், லக்ஷ்மன் கதிர்காமரையும் இணைத்தவரும் ராஜன் ஆசீர்வாதமே ஆவர்.

பொ. ஐ. முன்னணி அதிகாரத்துக்கு வந்ததைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் தலைவராக நியமிக்கப் பட்டார். பின்னர் அப்பதவியையும் இராஜினாமாச் செய்தார். (இ–10)

# பொன்விழா நிகழ்ச்சியில்

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி கூ. சங்கத்துக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பணிகளைக் கௌரவித்து கால் நடை அபிவிருத்தி தோட்டத்துறை அமைச்சர் எஸ். தொண்டமானால் சிறப்புப் பரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சியில் வைத்தே இச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

இலங்கையில் கால்நடை அபிவிருத்தியில் ஏனைய பிரதேசங்களுக்கு முன் மாதிரியாகச் செயற்படுவதனைப் பாராட்டியும் பால்பொருள் உற்பத்தியைக் கௌரவித்துமே இச்சான்றிதழ் வழங்கப்பட்டது. (இ–5)

# சாயி சமித்தியில் சிவராத்திரி விழா

திருநெல்வேலிசேர்பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று புதன்கிழமை மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

காலை 8–45 மணிக்குக் கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகும். பாலவிகாஸ் மாணவர்களின் பஜனை, சிவ புராணம் ஓதல், வாத்திய விருந்து, சிவ நாம இசை, சிவ பஜனை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். (ஐ)

# தென்னை நாற்று மேடை; 10 லட்சம்ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 25

தென்னை நாற்று மேடை அமைப்பதற்கு பத்து லட்சம் ரூபா நிதியினை யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா கமநல சேவை நிலையங்களுக்கும், 5 லட்சம் ரூபா தென்னை அபிவிருத்திச் சபைக்கும் தென்னை நாற்று மேடைகள் அமைப்பதற்கு மென வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தென்னை மரங்கள் பல கடந்த கால அனர்த்தங்களின் போது அழிக்கப்பட்டுள்ளன. அழிந்துள்ள தென்னைகளுக்கு ஈடாக தென்னைச் செய்கை மேற்கொள்வதற்கு வசதியாக 50 ஆயிரம் தென்னை நாற்றுகளை மீளவும் நடுகை செய்யும் நோக்குடனேயே தென்னை நாற்று மேடைகள் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் பெரும் போகத்தின் போது யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தென்னை நாற்றுகள் தாராளமாக விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (இ-5)

## தேர்த் திருவிழா

திருநெல்வேலி அருள்மிகு பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்காலையும், தீர்த்தத்திருவிழா நாளை வியாழன் காலையும் வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளன.

தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் விசேட நாதஸ்வர, தவில் கச்சேரிகள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–7)

## சிறுவர் நாடகம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். நாடக அரங்கக் கல்லூரியும் அரங்க செயற்பாட்டுக் குழுவும் வழங்கும் இடுச்சண் வருங்கால்... என்னும் சிறுவருக்கான நாடகம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளது. (இ–5)

## மீனவ நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 25

வடமராட்சி கிழக்கு பகுதி மீனவர்களுக்கான மீனவ நிவாரணம் 19 ஆம் கட்டம் நாளை வியாழக்கிழமை முதல் வழங்கப்பட இருப்பதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந் நிவாரண விநியோகம் சீனி கையிருப்பில் இல்லாமையால் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ–[illegible])

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 10 — 1920

உதிர்வு: 08 — 03 — 1997

அமரர்

## சின்னத்துரை சதாசிவம்

திதி: 25 – 2 – 1998

அன்புத்தந்தையே!

ஆண்டு ஒன்று ஓடினவே ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு அகலவில்லை. பாசமும் பரிவும் காட்டி எம்மை வளர்த்து வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மாசாந்தி அடையஅம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
த. இராசேந்திரம் (சேனாதி)
(மருமகன்)
தொட்டிலடி, சங்கானை.

[53630]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கைதான சட்டத்தரணி விடுதலை

கொழும்பு, பெப். 25

கொழும்பு, கொம்பனி வீதியில் உள்ள விமானப்படையினரின் சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் விமானப்படையினரால் கைது செய்யப்பட்டு கொம்பனி வீதிப் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த செல்லத்துரை செல்வகுணபாலன் என்ற சட்டத்தரணியை கொழும்பு கோட்டை நீதிவான் மோரின் காமினி விஜேதுங்கா விடுதலை செய்துள்ளார்.

குற்ற விசாரணைத் திணைக்களம், தேசிய தகவல் பணிமனை மற்றும் 12 ஆவது படையணித் தலைமையகம் ஆகிய புலனாய்வு அமைப்புகள் மேற்கொண்ட விசாரணைகளின் படி சட்டத்தரணி செல்வகுணபாலனுக்கு எதிராக எதுவித தகவல்களும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ–10]

# மலேரியாவைக் கட்டுப்படுத்தும் மருந்து போதிய அளவு இல்லை

## பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

''மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் போதிய அளவு கையிருப்பில் இல்லை என்றும் —

இவற்றைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக டாக்டர் தெய்வேந்திரன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் பின்வருவனவற்றை அவர் சுட்டிக் காட்டினார்.

★ மலேரியாக் கிருமிகளை அழிப்பதற்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொன்றும் 50 கிலோ அடங்கிய 100 பைக்கெட் மலத்தியோன்தேவைப் படுகிறது. ஆனால் எமக்குக் கொழும்பிலிருந்து மிக அரிதாகவே இவை அனுப்பி வைக்கப்படுகின்றன. அண்மையில் கூட குறைந்தளவு மலத்தியோனே அனுப்பி வைக்கப்பட்டது.

★ மலத்தியோன் தெளிப்பதற்கு 24 யூனிட்டுக்கள் தேவை. ஆனால் 2 யூனிட்டுகளே இருக்கின்றன.

★ குளம் மற்றும் குட்டைகளிலுள்ள குடம்பிகளை அழிப்பதற்கு 'அபேற்' என்னும் மருந்து வகை தேவை. அது இங்கு இல்லை.

மேற்குறிப்பிட்ட காரணிகளால் மலேரியாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் கடந்த வருடம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற பகுதிகளில் மலேரியாவினால் கூடுதலானோர் மரணமானார்கள்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி கொழும்பிலுள்ள அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

இது தொடர்பாக தற்போது கொழும்பில் தங்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ரரமேஸ்வரனுக்கும் அவர் அறிவித்துள்ளார்.

(இ–5)

# தந்தை செல்வா நூற்றாண்டு நிகழ்ச்சிகள்

## அகில இலங்கை ரீதியில் நடைபெறவிருக்கும் கட்டுரை, கவிதைப் போட்டிகள்

தந்தை செல்வா நூற்றாண்டினை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையேயும், ஏனையோரிடையேயும், கட்டுரை' கவிதைப் போட்டிகளை நடத்துவதென ''தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசிய சபை'' தீர்மானித்துள்ளது.

மேற்படி போட்டிகள் பின்வரும் மூன்று பிரிவினரிடையே நடத்தப்படவுள்ளன.

1. க. பொ. த. (சாதாரண தரம்) வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர் மட்டத்திலான போட்டி.
2. க. பொ. த. (உயர் தரம்) வகுப்பில் கல்விபயிலும் மாணவர் மட்டத்திலான போட்டி.
3. எல்லோரும் பங்குபற்றக் கூடியதான திறந்த போட்டி.

**மாணவர்களிடையே நடைபெறவுள்ள போட்டியின் விதிகள் பின்வருமாறு:**

1. ஒவ்வொரு மாணவனும்/ மாணவியும் தன்னுடைய விண்ணப்பத்தை அதிபர் மூலம் தான் மாணவர் என்பதை உறுதிசெய்து அனுப்புதல் வேண்டும்.
2. போட்டிகள் குறிப்பிட்ட ஒரு தினத்தில், குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும்.
3. பங்குபற்றுவோர் தங்களுடைய அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்குரிய ஏதாவது ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கட்டுரை/ கவிதை எழுதுவதற்கு ஒரு மணித்தியாலம் மட்டும் வழங்கப்படும்.
5. கவிதை எந்த வடிவிலும் அமையலாம். மாபுக் கவிதையானால் 40 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக் கவிதையானால் 80 வரிகளுக்கு மேற்படாமலும் அமையலாம்

கட்டுரை 350 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்

திறந்த போட்டியில் எவரும் பங்குபற்றலாம். இவர்கள் கீழே தரப்பட்ட தலைப்புக்களில் கட்டுரை/ கவிதை எழுதி அனுப்பலாம். ஒருவர் எத்தனை கவிதை அல்லது கட்டுரை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

1. கவிதை புதுக்கவிதையாகவோ அல்லது மரபுக் கவிதையாகவோ அமையலாம்.
2. மரபுக்கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமலும் புதுக்கவிதை 100 வரிகளுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.
3. கட்டுரை 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
4. கவிதை, கட்டுரை என்பன தனித்தனித் தாள்களிலும், பெயர், விலாசம் என்பன பிறிதோர் தாளிலும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

**பொது:**

1. தரமான கட்டுரைகள், கவிதைகள் பிரசுரிக்கப்படும்.
2. தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத்தேசிய சபையின், இப்போட்டிகளை நடத்தும் உபகுழு (கல்வி) வின் தீர்மானமே இறுதியானதாகும்.
3. (அ) மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இறுதி நாள் 15 – 03 – 98 ஆகும்.
   (ஆ) ஏனையோர் (திறந்த போட்டிக்கு) கட்டுரை, கவிதை அனுப்புவதற்கு இறுதிநாள் 30 – 03 – 98 ஆகும்.
4. (அ) யாழ். மாவட்டப் போட்டியாளர்களாயின், மாணவர்கள் விண்ணப்பங்களையும், ஏனையோர் கவிதை, கட்டுரைகளையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

செயலாளர்,
தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கல்விக் குழு,
440, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ஆ) ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த போட்டியாளர்களாயின், மாணவர்கள் விண்ணப்பங்களையும், ஏனையோர் கவிதை, கட்டுரைகளையும் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

செயலாளர்,
தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கல்விக் குழு,
146/19, ஹவ்லொக் வீதி, கொழும்பு – 5
(Havelock Road, Colombo - 5)

5 (அ) கவிதைப் போட்டிக்கான தலைப்புக்கள்:

1) தந்தை செல்வா பிறந்திலரேல் ......
2) தந்தை காட்டிய வழியினிலே ......
3) எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே ......
4) அண்ணல் காந்தியின் வழியில் தந்தை செல்வா ....
5) வாழ்க எம் செல்வா வாழ்க அவர் கொள்கை ....

(ஆ) கட்டுரைப்போட்டிக்கான தலைப்புக்கள்:

1) தீர்க்கதரிசி தந்தை செல்வா.
2) தந்தை செல்வாவின் அரசியல் அடிச்சுவடுகள்.
3) மக்கள் விடுதலைக்குத் தந்தை செல்வா காட்டிய வழி.
4) இலங்கை அரசியலில் தந்தை செல்வாவின் பங்கு.
5) சமகால அரசியல் தலைவர்களுடன் தந்தை செல்வா ஓர் ஒப்புநோக்கு.

**பரிசுகள்:**

1. க. பொ. த. (சா.த) வகுப்பு வரை: தெரிவு செய்யப்படும் முதல் மூவருக்கு ரூபா 20,000 பெறுமதிமிக்க தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
2. க. பொ. த. (உயர்தர) வகுப்பு: முதல் மூவருக்கு ரூபா 30,000 பெறுமதிமிக்க தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
3. ஏனைய (திறந்த) போட்டியாளர்கள். முதல் மூவருக்கு ரூபா 50,000 பெறுமதிமிக்க தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும்.
4. யாழ்ப்பாணம், வன்னி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் இவை தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் கொழும்பு உட்பட ஒரு மாவட்டமாகக் கருதப்பட்டு, மாவட்ட மட்டத்திலும் முதல் மூவருக்கும் தகுந்த பரிசுகள் வழங்கப்படும்.

தந்தை செல்வா தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், ஆவணங்கள் வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாவை சோ. சேனாதிராசா,
இணைச் செயலாளர்,

**தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசிய சபை**

(சி–2917)

# சிவராத்திரி நிகழ்ச்சிகள்

இளம் கலைஞர் மன்றம் சிவராத்திரி தினத்தையொட்டி நடத்தும் இசை நிகழ்ச்சி இன்று மாலை 3 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நல்லூரிலுள்ள மன்றக்கலா மண்டபத்தில் நடைபெறும்.

இந்த இசை நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் அ. சண்முகதாஸும், சிறப்பு விருந்தினராக கலாநிதி நா. சுப்பிரமணியனும் கலந்து கொள்கின்றனர். (இ–5)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையினர் நடத்தும் சிவராத்திரி திருவிழாவும் கலைநிகழ்ச்சிகளும் இன்று காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்மாகி நடைபெறும்.

காலை 9 மணிக்கு பிரம்மஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் சமய தீட்சை வழங்கப்படும். இரவு 9மணிக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு தலைமையில் ''சமய குரவர் நால்வருள் நமக்கு சிறப்பாகவழி காட்டுபவர் சம்பந்தரா? அப்பரா? சுந்தரரா? மாணிக்கவாசகரா? என்னும் தலைப்பிலானபட்டிமன்றமும் விசேட நிகழ்ச்சியாக இடம்பெறும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டணமின்றி வந்த பொருள்களை நியாயமான விலைகளில் விற்குக

## நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25 ''கப்பல் கட்டணமின்றி தருவிக்கப்பட்ட பொருள்களின் நன்மையை நூறுசத வீதம் பாவனையாளர்கள் அடைய வேண்டும். இதற்கு பொருள்களைத் தருவித்த சகல நிறுவனங்களும் நியாயமான முறையில் செயற்பட வேண்டும்''.

இவ்வாறு யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கப்பல் கட்டணமின்றி கொண்டுவரப்பட்ட பொருள்கள் தனியார் வர்த்தகர்களிடம் சிக்கிவிடாது பார்த்துக் கொள்ள வேண்டியது சகலரதும் கடமை ஆகும்.

இதுவரை காலமும் நுகர்வுப் பொருள்களின் விலை ஏற்றத்திற்கு கப்பல் கட்டணமே காரணமெனக் கூறப்பட்டது.

கட்டணமின்றி தற்போது பொருள்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. ஆகவே பொருள்களின் விலை நியாயமான அளவில் குறையும் என எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–5)


## வடமராட்சியில் மீண்டும் சென்ரல் சேவிஸ் ஸ்ரேசன்

யாழ்ப்பாணம் றோட், நெல்லியடி.

அதே இடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தரமான முறையில் குறைந்த கட்டணத்தில் முன் அனுபவமும் திறமையும் உள்ள தொழிலாளர்களால் சகல வாகனங்களும் சேவிஸ் (SERVICE) செய்து கொடுக்கப்படும்.

—நிர்வாகி

(சி/2960)



## கலையகம்- ஆவரங்கால்

**A/L 98 Day Class**

அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள்
(அச்சிட்ட வினாவிடைக் குறிப்புக்களுடன்)

ECO. — R. அன்ரனி ACC. — K. S. பிரகாஷ்
COM. — V. உதயமோகன் STATS. — S. திரிகரன்
LOG. — K. நவநீதன் DRAMA — V. வளர்மதி
தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம்
கோப்பாய் — சிவம்

ஆரம்பம்: 01. 03. 98 ஞாயிறு பி. ப. 3. 00 மணி
A/L 2000 — கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

[53594]



அறவழிப் போராட்டக் குழுவின்

## 19 ஆவது ஆண்டு விழா

இன்று 25–02–1998

இடம்: கைதடி சைவச் சிறுவர் இல்லம்
நேரம்: காலை 10.30 மணி
தலைமை: திரு. வீ. ஜீ. தங்கவேல்
(தலைவர் அறவழி)

இவ்வைபவத்தில் அன்பர்கள் பணியாளர், அறவழி ஆசிரியைகள் திட்ட மாணவர்களைப் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம். கே. ஜீவகதாஸ்
கௌரவ செயலாளர்

NVDAG
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(53610)



கொழும்புவரும் பயணிகளுக்கு ஒருநற்செய்தி!

வெள்ளவத்தையில் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஸ்தாபனம்

## ஹோட்டல் சீவம்ஸ்

பிறைவேட் லிமிட்டெட்

என்பதை உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குளியல் அறைகளுடன் கூடிய தனி அறைகள் இருவர் தங்கும் அறைகள் சகாயமான நாள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**HOTEL SEVAMS (P V T.) LTD.**

396/1, GALLE ROAD,
WELLAWATTE,
COLOMBO - 6

(53619)


## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 25 யாழ். கல்வி வலயம் ஐச் சேர்ந்த அனைத்து ஆசிரிய ஆலோசகர்களுக்குமான ஒன்று கூடல் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை9 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற உள்ளது.

அனைத்து ஆசிரிய ஆலோசகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [இ–9]

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 25 யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையினரால் வெளியிடப்படும் ''புவியியலாளன்'' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும். (இ–7)

## சீனி கையிருப்பில்

யாழ். மாநகரப் பகுதியில் சீனிக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சங்கத்தில் சீனி போதிய அளவு கையிருப்பில் இருப்பதாகவும் சீனியை கிளைகள் மூலம் மக்களுக்குத் தாராளமாக வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ–17)

## ஜோகட் உற்பத்தி நிலையம்

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 'ஜோகட்' உற்பத்தி நிலையத்தை யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்தத் திறப்பு விழாவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதி, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கொழும்புத் தலைமையகப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


## வெற்றுப் பெட்டி விற்பனைக்கு

வெற்று மரப்பெட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

**புதிய விமாகி**

27/3, மின்சார
நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(53613)


## அ. புரம் சிறைச்சாலைக்கு இடம்மாற்றப்படுகையில் சுகயீனமடைந்த பெண்

அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட இருந்த சமயம் சுகயீனமடைந்த நாவற்குறியைச் சேர்ந்த செல்லையா நவமணி (வயது 60) என்ற பெண் நீதிமன்றில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டு நாளை 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வரை படம் ஒன்றுடன் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப் படவிருந்த போது சிறைச்சாலையில் இவர் சுகயீனமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இப்பெண்ணின் வைத்திய அறிக்கை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் படுவதுடன் இவரின் பிணை தொடர்பான சட்டத்தரணியின் கோரிக்கை விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் வரை அனுராதபுரம் சிறைக்கு இவரை மாற்றக் கூடாதெனவும்—

யாழ். சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலே இவரை வைத்திருக்க வேண்டும் எனவும் மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் த. அரியநாயகம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார்.

இந்த வழக்கில் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவா பாலேந்திரா சந்தேக நபரான பெண் தொடர்ந்து சுகயீனமாக இருப்பதால் அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அதுவரையும் அவரை அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டாமெனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை பரிசீலித்தபின்னரே பதில் நீதிவான் நாளை வரை மறியலில் வைக்குமாறு கட்டளை பிறப்பித்தார். (இ–5)


## NEW SCIENCE HALL

குருநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

PURE/APPLIED MATHS
**98 A/L, 97 A/L Day**

நிகழ்தகவு ஆரம்பம் 25 - 02 - 98 WED. 4. 30 P. m.
தாயங்கள் MON., FRI. 4. 30 p. m.
Rocket Motion FRI. 7. 00 — 10. 00 a. m.
வகையீட்டு சமன்பாடு WED. 9. 00 — 12. 00 a. m.

**A/L 2000, A/L' 99**

SAT, SUN 1.00-3.00 p. m, 3.00-5.00 p. m
வகுப்புகள் மாணவர் வசதிகருதி 28-02-98 இல் NEW SCIENCE HALL இல் நடைபெறும்.

ஆசிரியர்: A. RAVI

(53627)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி வினாசித்தம்பி தெய்வானை

தோற்றம்: 07 – 05 – 1913
மறைவு: 26 – 01 – 1998

எங்கள் அன்புத்தாயே! நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு நீங்காது என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

இன்று 25–02–98 புதன்கிழமை நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்.

ஒட்டுவெளி,
மிருசுவில்.

(53624)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உணவுச்சாலைக்கு தேவையான உபகரணங்கள், கட்டடப் பொருள்கள் உட்பட விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.K. வேலாயுதம், யாழினி கிறீம் ஹவுஸ், பிரதான வீதி, நெல்லியடி.
[53605]

### தவறிவிட்டது

இளையதம்பி மதியுகநாதன் (இரதிமகால், கரணவாய் கிழக்கு) என்பவரின் மோட்டார்காப்புறுதிப்புத்தகம், வரிப்பற்றுச் சீட்டு ஆகியனயாழ். பருத்தித்துறைவீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் உதவி அரசாங்க அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.
[53622]

### மணமகள் தேவை

U.K- இல் குடியுரிமை பெற்று அங்கு பணிபுரியும் யாழ்ப்பாணம், வந்து நிற்கும் 36 வயதுடைய யாழ். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 30 வயதுக்கு உட்பட்ட படித்த மணமகளைப் பெற்றோர் விரும்புகின்றனர். அச்சுவினி -2, செவ்வாய் 10 விண்ணப்பிக்குக, விளம்பர இல., 704, C/o உதயன் யாழ்ப்பாணம்.
[53614]

### சிங்கள வகுப்பு

சனி / ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம். 28-02-98 (சனிக்கிழமை) ஆசிரியர்: T. Sagathevan, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
[53508]

### O/L MATHS

98, 99 (புதிய பாடத் திட்டம்) இல் Distinction Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து ஆண்டு 8 — 10 வரை கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி, [53609]

### திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்திக் கொள்ளவும், ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும் வீனஸ் தனபாலசிங்கம், Diploma in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரைக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
[சி/2843]

**S. M I**
சங்கானை
**A/L 98**
DAY CLASS
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 25 . 02 . 98
கணக்கீடு
D. SAM
(53621)

புவியியலாளன் சஞ்சிகை இதழ் 10,11
சூழல் - சிறப்பிதழ்

## வெளியீட்டு விழா

காலம்: 26 . 02 . 98 வியாழக்கிழமை
பிற்பகல் 2.00மணி
இடம்: புவியியற்றுறை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.
ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புவியியற்கழகம்,
யாழ். பல்கலைக் கழகம்

அன்பளிப்பு:
'லிங்கன் கூல்பார்'
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (53607)

## விற்பனைக்கு

ஸ்ருடியோ/கலர் லாப்
STUDIO & COLOUR LAB FOR SALE
கொழும்பு தெற்கு காலிவீதியில்

பிரபலமான ஸ்ருடியோவுடன் கூடிய கலர் லாப் சகல உபகரணங்களுடனும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

Colour Lab - Naritsy Qss

கறுப்பு / வெள்ளை பிரிண்டிங் செய்வதற்கான Dark Room வசதியும் உண்டு.

வியாபாரம், பெயர், விலாசமாற்றமின்றி தொடரும் வண்ணம் சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

உடன் தொடர்பு கொள்க.

**Photochrome Trading (Pvt.) Ltd,**
122 C, Dutugemunu Street,
Kalubovila, Dehiwala.
T. P 820057
071-31177
(சி/2928)

தென்னிந்திய திருச்சபை
யாழ். அத்தியட்சாதீனம்

## குரு அபிஷேகம்

நுணாவில் திருச்சபை ஊழியன்
**வண. J. தேவ அருட்செல்வம்**
26 – 2 – 98 வியாழன் காலை 9–00 (இல. நேரம்) மணிக்கு
குருவாக
பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி
எஸ். ஜெபநேசன் அவர்களினால்
அபிஷேகம் பண்ணப்படுவார்.
யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அ. ஜெயராஜன்
செயலாளர்

தென்னிந்திய திருச்சபை ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.
23 – 02 – 98 (சி–2951)

## மகா சிவராத்திரி விழா

நெல்லியடி
தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில்

மகா சிவராத்திரி விழா இன்று மாலை 6. 15 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் ஆரம்பமாகும். அபிஷேகம், நான்கு சாமப் பூசைகளுடன் நெல்லியடி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை, வடமராட்சி மகளிர் மத்திய கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகள், ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் ஆற்றும் சொற்பொழிவு, உடுப்பிட்டி வானம்பாடிகள் குழுவினரின் வில்லிசை, சுழிபுரம் பிரசங்க பூஷணம் திரு. ந. சிவசண்முகமூர்த்தி அவர்கள் வழங்கும் சங்கீத கதாப் பிரசங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

அனைவரும் வருக; அருளமுதம் பெறுக.

ஆலய பரிபாலன சபையினர்.
(சி/2954)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.
க. பொ. த. உயர்தரப் பரீட்சையில்
சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| செ. கிருபாகரன் | 4A | (வர்த்தகம்) |
| ம. கண்ணகி | 3A, B | (வர்த்தகம்) |
| ம. மோகன்ராஜ் | 3A, B | (கலை) |
| க. மனோகரன் | A, 2B, C | (கலை) |
| பி. சுகந்தினி | A, 2B, C | (கலை) |
| ஞா. ஞானச்சந்திரன் | A, 2B, C | (கலை) |
| செ. பன்னீர்ச் செல்வம் | 3C, S | (கணிதம்) |

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் — 48
பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதியுடையோர் — 34
சித்தியடைந்தோர் வீதம் 71 %

இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

தமிழ்ச் சங்கம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி,
புத்தூர்.
(53623)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பாக்கியம் இராமலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை, நாவலர் வித்தியாலயம், கோப்பாய்)

அன்னை மடியில்: 24 — 03 — 1931
அரன் அடியில்: 20 — 02 — 1993

திதி: 25 — 02 — 1998

ஐந்து ஆண்டு சென்றாலும் தீராது நம் கவலை,
அன்பாகவும், பாசமாகவும், மலர்ந்த முகத்துடன்
எம்மை எல்லாம் வழி நடத்திய தலைவியே!
உங்களை நாம் என்றும் மறவோம்.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், உற்றார்,
உறவினர்கள்.

நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (53597)

**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!**

## ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம் **ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்!

கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டுபேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள் **HOTEL SEIVAMS** (GUEST HOUSE) No. 29A, SANGAMITHA MAWATHA, KOTAHENA, COLOMBO - 13
(53620)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உபதேசம் ஊருக்கா?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அரசு அக்கறையாக உள்ளது. ஆனால் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அதில் ஆர்வத்துடன் பங்கு கொள்ளாமல் நழுவல் போக்கைக் கடைப் பிடிக்கிறது.

இத்தகைய ஒரு கருத்து நிலையை முன் வைத்து, அரசின் முயற்சிக்கு உதவுமாறு ஐக்கிய தேசியக் கட்சி மீது வெளிநாடுகளைக் கொண்டு அழுத்தம் போடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு அழுத்தம் கொடுப்பதற்கு வெளிநாடுகளின் உதவியைப் பெறும் பொறுப்பு, அரசமைப்பு விவகார அமைச்சிடமும், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரை நிறுத்தவும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி தமிழர்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நியாயமான தீர்வைக் கொண்டு வரவும், அரசாங்கத்தின் மீது அழுத்தம் போடுவதற்கு வெளிநாடுகளின் உதவியைத் தமிழர்கள் நாட வேண்டிய நிலையே இன்றைய யதார்த்தமான தேவையாகி உள்ளது.

ஆனால், மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் அல்லது உதவியோடு விடுதலைப் புலிகளுடன்பேசித தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசு உள்ளார்த்தமாக விரும்பவில்லை என்பதே உண்மை.

இது விடயத்தில் அரசு — அரசுத் தலைவர்கள் — நேரத்துக்கு நேரம் நிலை மாறுகிறார்கள். ஜனாதிபதி வெளிநாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குச் செவ்வி அளித்த போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்குத் தயார் என்று தெரிவித்தார்.

ஆனால் வெளிவிவகார அமைச்சர் அண்மையில் இந்தியப் பத்திரிகை "இந்து" வுக்கு வழங்கிய செவ்வியில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை என்றுகூறியுள்ளார்.

இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம்; அந்தப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு சாராரும் தமக்குள்ளேயே அதனைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதே அரசதரப்பினரின் உள்ளார்ந்த எண்ணம்.

ஆனால், தமது அடிப்படை அரசியல் அபிலாசைகளைத் தானும் நிறைவேற்றாத தீர்வு ஒன்று தம்மீது திணிக்கப்பட்டுத் தாம் ஏமாற்றப்படலாம் என்று, முந்திய அனுபவங்களைக் கொண்டு தமிழ் மக்கள் அஞ்சுகின்றார்கள்.

இனப் பிரச்சினை விவகாரத்தில் ஐ. தே. கவை வழிக்குக் கொணர்வதற்கு வெளிநாட்டு அழுத்தம் — உதவி — தேவையெனக் கருதும் அரசு —

அதே பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பதற்கு வெளிநாட்டின் உதவியைப் பெற, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பெற மறுப்பது என்ன நியாயம்?

ஊருக்குத்தான் உபதேசம், நமக்கில்லையடி கண்ணே என்ற நிலையா இது!

# சிவபூசையும் வழிபாடும் நடத்தவே சிவராத்திரி; திரைப்படம் பார்த்துப் பாவத்தைத் தேடாதீர்!

சிவராத்திரி என்பது சிவனுடைய இராத்திரி. சிவமான இராத்திரி; சிவனை அர்ச்சிக்கும் இராத்திரி; சிவனுக்கு இன்பமான இராத்திரி என்று பலவகைக் கருத்தினைக் குறிக்கும். சிவமான இராத்திரி என்பதே இவைகளில் மிகப்பொருத்தமானது.

இது நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி மகாசிவ ராத்திரி என்று ஐந்து வகைப்படும்.

மாசிமாதம் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் லிங்கத்தில் தோன்றினார். அன்றே மகாசிவராத்திரி ஆகையால் இப்பொழுதும் அந்த இரவில் உலகிலுள்ள எல்லா லிங்கங்களிலும் சிவன் தோன்றுகிறார். அன்று சிவபூசை எல்லோருக்கும் விருப்பத்தைக் கொடுக்கக் கூடியது.

அன்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நீராடி தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவநாமத்தை ஜெபிக்க வேண்டும். இரவில் சிவனுக்கு விளக்கிட்டு, நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன் கருப்பஞ்சாறு, இளநீர், பழச்சாறு முதலியவற்றால் அபிஷேகம் செய்து பலவிதமான தின்பண்டங்கள், பழங்கள் முதலியவைகளைப் படைக்க வேண்டும். சிவனடியார்களுக்கு நம்மால் இயன்ற அளவு நன்மை செய்ய வேண்டும்.

இவ்விதம் பதினனான்கு ஆண்டுகள் சிவராத்திரி விரதம் அனுட்டித்து கடைசி ஆண்டில் பூர்த்தியும் செய்ய வேண்டும். அன்று தங்கத்தாலோ, வெள்ளியாலோ சிவ உருவம் செய்வித்து அதில் அர்ச்சனை செய்து



அதைத் தானம் செய்ய வேண்டும். அன்று ஏனைய தானங்களும் செய்ய வேண்டும். அவ்வாறு சிவபூசை செய்வோருக்கு சிவபெருமான் முத்தியைக் கொடுக்கிறார் என்பது நம்பிக்கை.


கருணை வடிவான தேவி நமக்காகச் சிவபூசை செய்த நாள் சிவராத்திரியாகும். சிவம் என்ற சொல்லுக்கே துன்பத்தைத் துடைக்கவல்லது என்று அர்த்தம். ஒரு சமயம் உமாதேவியார்விளையாட்டாக ஈசுவரனது கண்களை அவருக்குப் பின்புறமாக வந்து பொத்தி விடுகிறார்; எங்கும் பேரிருள் பரவுகிறது. இந்நிலையில் தேவர்கள் சிவபூசை செய்த இரவே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது.

நான்கு சாமத்திலும் நித்திரை விழித்து, மறுநாள் அதிகாலையில் புனிதநீராடி, அனுட்டானம் இயற்றி, தமது தீட்சா குருவை தியானித்து தக்கவாறு தானம் கொடுத்து சூரியன் உதித்த ஆறு நாழிகைக்குள் பாரணை செய்ய வேண்டும். விரதம் அனுட்டிப்போர் மேற்படி நாளுக்கு முதல் நாள் ஒரு நேர உணவு உண்டு மகா சிவராத்திரியன்று உணவு உட்கொள்ளாதும் இரவு நித்திரை கொள்ளாது விழிதித்ருந்தும் விரதம்அனுட்டிப்பதே சாலச் சிறந்ததாகும்.

சிவராத்திரி சிவபூசை வழிபாடு நடத்துவதற்கும் சிவதீட்சை ஏற்றுச் சிவலிங்க வழிபாடு செய்வதற்கும் ஏற்றசிறந்த நாளாகும்.

சிவராத்திரிஎன்றால் விழித்திருக்க வேண்டியது தானே முக்கியம் என்று நினைத்து, சிலர் திரைப்படங்களுக்கும், நாடகக் கொட்டகைகளுக்கும் சென்று அப்படியும் இப்படியுமாக தவப் பொழுதை வீண் அவப்பொழுதாகக் கழிந்து விடுகிறார்கள். இதனால் பாவத்தையே தேடுகிறார்கள். சிவராத்திரியன்று நித்திரை செய்யாமல் இருந்தால் புண்ணியம் உண்டு என்பது சரியே. ஆனால் அன்று சிவபூசை, சிவவழிபாடு தவிர்ந்த ஏனையவற்றில் இரவைக் கழிப்பதால் சிவனை நிந்தனை செய்த பெரும் பாவம் சேரும்.

சிவராத்திரி நாள் இரவில் நான்குசாமத்திலும் சிவலிங்க வழிபாடுகளைத் தரிசித்தும், தாம் வழிபாடு நடத்தியும் சிவபெருமானைச் சிந்தித்திருந்து நற்பேறு பெற வேண்டும் என்



பதே ஆகும்.

சிவன் கோயில்களில் மட்டுமல்ல ஏனைய ஆலயங்களிலும் நான்கு சாமப் பூசையும் நடக்கும் அப்பூசைகளைக் கண்டும், நடத்தியும் தானதருமங்கள் செய்தும், சிவநாமங்களை உச்சரித்தும், அவன் புகழைப் புகன்றும், புகலக்கேட்டும் சிவபுண்ணியம் அடையலாம்.

சிவராத்திரியைப் பற்றி ஆகமங்கள் பலவாறு கூறுகின்றன. இந்தியாவில் திருவண்ணாமலையில் சிவராத்திரி வழிபாடு சிறப்புறுவதாயிற்று. இவ்வரலாற்றை உள்ளடக்கியே திருநாவுக்கரசு நாயனார் லிங்க புராணத் திருக்குறுந்தொகையைப் பாடி சிவலிங்கத்தை எவ்வாறு வழிபட வேண்டும் என விவரமாகக் கூறியுள்ளார்.

— க. சிவசங்கரநாதன்

# நகுலேஸ்வரத்தில் சிவராத்திரி

புராதன காலத்தில் திருத்தம்ப லேஸ்வரம் எனவும், நகுல முனிவர் அருள் பெற்றபின் நகுலேஸ்வரம் எனவும் அழைக்கப்படும் கீரிமலைச், சிவன் கோயில், யாழ்ப்பாணத்தின் வடபாகத்தில் சாகர சங்கம புண்ணிய தீர்த்தக் கரையில் இருக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று விசேடங்களையும் பெற்றதனால், இஷ்ட சித்திகளைக் கொடுப்பதாகவும், மனோலயத்துக்கும், வியாதி நீக்கத்திற்கும் புகழ் பெற்றதாகவும் அமையும் ஸ்தலம் இது.

நகுலேச தீர்த்தம், நகுல கிரியின் மேற்குப் பக்கத்திலே தெற்கில் ஊறும் சுத்த நீரும் வடக்கில் ஊறும் உப்பு நீரும் கலந்து வரும் திவ்விய தீர்த்தம். கங்கா சமுத்திர சங்கமம் என்றும், கண்டகி தீர்த்தம் என்றும் அமைக்கப் பெறும் இத் தீர்த்தத்தில் காலந்தோறும் அளவில்லாத அன்பர்கள் விதிப்படி ஸ்நானம் செய்து பயன் பெற்றிருக்கிறார்கள்.

நகுல முனிவர் இம்மலையில் இருந்து தவம் செய்து, பல்லாண்டு காலம் தீர்த்த ஸ்நானம், ஈஸ்வர வழிபாடு ஆகியன செய்து கீரிமுகம் நீங்கப்பெற்றதான ஐதிகம் குடாநாட்டு மக்களிடையே மிகச் செல்வாக்குப் பெற்ற கதை.

திசையுக்கிர சோழன் மகளாகிய மாருதப்புரவீகவல்லி இத் தீர்த்தத்தில் நீராடித் தன் குதிரை முகமும் குன்ம நோயும் நீங்கப் பெற்றாள் என்பது மாவிட்டபுரத்திற்கும் கீரிமலைக்கும் மகத்துவம் தரும் ஐதிகம்.

நகுலேஸ்வராலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்திலே – 1878 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24 ஆம் திகதி — ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கீரிமலைச் சிவன் கோயில் பற்றி ஒரு விஞ்ஞாபனம் தமது கையொப்பத்தோடு வெளியிட்டார்கள். "யாழ்ப்பாணத்திலே, மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள கீரிமலையில் ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது" என்று அந்த விஞ்ஞாபனம் தொடங்குகிறது. இக் கோயிலை மீண்டும் கட்டுவிப்பதற்கு ஆறுமுகநாவலர் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

ஆயினும் 1879 இல் சைவ சமயிகளின் பாக்கியக் குறைவினால் நாவலர் அவர்கள் சிவபதம் அடைந்து விட, குருக்கள்மாரது ஊக்கத்தினாலும் வண்ணார்பண்ணையை ஆறுமுகம் போன்ற சைவ அன்பர்களின் உதவியாலும் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு 1895 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்காலத்தில் தேர்த் திருவிழாவிலே ஐந்து தேர்கள் இழுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

1918 ஆம் ஆண்டு காத்திராப் பிரகாரமாகக் கோயில் தீக்கிரையானது. தீ மூண்ட போது அங்கு நின்ற அடியார்கள் பெரிய இடப வாகனத்தை மிகச் சிரமத்துடன் வெளியே கொண்டு வந்து பாதுகாத்தார்கள். அக் காலத்தில் கோயிலின் ஆதீன கர்த்தராயிருந்த ஸ்ரீமத். தி. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் சிறிது காலம் மனம்களைத்து இருந்தாராயினும் பின்னர் தேறி, தமது உடல், பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்துத் திருப்பணி வேலைகளைச் செய்வித்தார்.

1947 இல் குமாரசுவாமிக் குருக்கள் சிவபதம் எய்திய பின் அன்னாரது சிரேஷ்ட புத்திரரும் இப்போதைய கோயிலின் ஆதீனகர்த்தருமாகிய சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் மீதித் திருப்பணி வேலைகளைப் பூர்த்தி செய்து 1953 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள்.

1955 ஆம் ஆண்டு சிவன் வாசல் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சிவராத்திரி தீர்த்தத்தை இறுதியாகவுடைய மாசி மகோற்சவம் பதினைந்து நாள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். விரதங்களில் சிறந்ததாகிய சிவராத்திரி விரதத்தை அநுட்டிப்பதற்கு ஆயிரக் கணக்கான மக்கள் குடா நாட்டின் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் வந்து கீரிமலையில் கூடிவார்கள்.

1973 ஆம் ஆண்டும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதன் பின்னர் கீரிமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இக் கோயிலை மையமாகக் கொண்டு இயங்கிய சிவநெறிக்கழகம் பாடசாலை மாணவர் மத்தியில் பல போட்டிகளை நடத்திச் சிவராத்திரி இரவிலே பரிசுகளை வழங்கும். பரிசுபெறும் மாணவர்களும் பெற்றோருமாக ஏராளமானோர் சிவராத்திரி இரவை இவ்வாலயத்தில் கழிப்பர்.

1980 களின் பிற்பகுதியில் இராஜகோபுர வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில்தான் – 1990 இடியென எங்களை இழுத்துச் சென்றது யுத்தம். வலி வடக்குப் பிரதேசம் குண்டு மழையினால் நிரம்பிடத் திடீரென்று வெறிச்சோடிப் போனது! நகுலேஸ்வரப் பெருமானும், கீரிமலைத் தீர்த்தமும், வெள்ளை மணற் பரப்பும், அருகிருக்கும் அலைகளும் எமக்கு அந்நியமாகிப் போயின!

ஏழு நீண்ட வருடங்கள்! காத்திருந்தோம், காத்திருந்தோம்! கண்விழித்துக் காத்திருந்தோம்!

இதோ அந்த சந்தர்ப்பம்! மீண்டும் இவ்வருடம் நாங்கள் அந்த மணலில் நடக்கலாம் மீண்டும் இவ்வருடம் நாங்கள் அந்த நடராஜரைத் தரிசிக்கலாம். அந்த நீண்ட இரவுப் பொழுதில் நாதஸ்வர ஒலியின் இனிமையில் நாம் ஊறித்திளைக்கலாம். இரவின் முடிவில், ஜில்லென்று குளிரும் தீர்த்தத்தில் இறங்கி எம் பாவங்களை மட்டுமல்ல, எங்கள் உள்ளங்களையும் ஒரு முறை சுத்தமாகக் கழுவிக் கொள்ளலாம்.

இன்று புதன்கிழமை மாலையில் விசேட பஸ் வண்டிகள் தெல்லிப்பழையில் இருந்து புறப்படுகின்றன. எல்லோரும் வாருங்கள் ஏறிக்கொள்வோம். நகுலேஸ்வரப் பெருமானை மட்டுமல்ல, கீரிமலை மண்ணையும் ஒருமுறை தொட்டு வணங்கி வருவோம். வியாழக்கிழமை தீர்த்த நீராடல் செய்து பிதிர்க்கடன்களை முடித்து மன நிறைவுடன் வீடு திரும்புவோம்.

— கோகிலா மகேந்திரன்

## நாளை

மாசி 14

வியாழக்கிழமை

திதி: அமாவாசை

முன் இரவு 11.52 வரை

நட்சத்திரம்: அவிட்டம்

முற்பகல் 11.09 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 7.59 – 9.29

(... பழைய நேரப்படி)

## உதய வாக்கு

நுட்பமாக ஆராய்ந்து அறிந்த கேள்வி அறிவு மிகுதியாக உடையவர்கள், ஒன்றைத் தவறாக அறிந்த போதும் சிறுமை தரும் சொற்களைக் கூறமாட்டார்கள். — திருவள்ளுவர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிணை செலுத்தப்பட்டு மேலும் 28 பேர் விடுவிக்கப்பட்டனர்!

யாழ்ப்பாணம் பெப் 25

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 28 பேர் நேற்று முன்தினம் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி. கொஸ்ரா முன்னிலையில் விடுவிக்கப் பட்டனர்.

இவர்களில் 16 பேர் பிணைப்பணம் மூலமும் — 12 பேர் சரீரப்பிணை மூலமும் விடுவிக்கப்பட்டனர்.

பிணைப்பணம் செலுத்த முடியாமல் இருந்தோருக்கு மனித கௌரவத்துக்கான அமைப்பு பிணைப்பணம் செலுத்தியது.

சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களை ஈ.பி.டி.பி அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் அனேகமானோர் கடந்த 3 மாதங்களுக்குள் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் கைது செய்யப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

பிணைப்பணம் செலுத்த முடியாமல் இருந்து பிணைப்பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

★ மணியம் சுரேஷ் — வலப்புரம் பாசையூர்

★ குமாரசாமி வைரவநாதன் — தனங்களப்பு

★ பாலசிங்கம் ஸ்ரீஸ்கந்தராசர — வலந்தலை காரைநகர்

★ நரசிங்கம் உமாபதிசிவம் — சங்கானை

★ குணாநந்தன் குணதீஸ்வரன் — கோண்டாவில் வடக்கு

★ ஜெயகலை கணேசானந்தன் — உசன்

★ இராசலிங்கம் தவநீதன் — சுதுமலை தெற்கு

★ கந்தசாமி அமலன் — இராமநாதபுரம் கிளிநொச்சி

★ பாலசிங்கம் ஆனந்தராசா — ஐயனார்கோயிலடி சுன்னாகம்

★ குமாரசாமி சந்திரகுமார் — கொக்குவில் கிழக்கு

★ கிருஸ்ணபிள்ளை தர்மசுதன் — நவாலி வடக்கு.

★ கந்தசாமி சிவகுமார்— ஸ்ரீ நகர் நாவாந்துறை.

★ அரியரட்ணம் பிரதீபன் — கோண்டாவில் வடக்கு.

★ பற்குணம் மனோறஞ்சன் — மானிப்பாய் கிழக்கு.

★ தில்லைநாதன் மகேந்திரராசா — உடுவில் கிழக்கு.

★ சாமுவேல் மாறி அசோகானந்தன் — துன்னாலை கிழக்கு.

சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டோர் விவரம்:-

★ குலசேகரம் தவமலர் — மந்துவில் கொடிகாமம்.

★ ஐ. பாஸ்கரன் — குடத்தனை.

★ வி. சிவலோகநாதன் — யாழ்ப்பாணம்.

★ எஸ். கிருஸ்ணராமசுந்தரம் — பருத்தித்துறை.

★ ஜே. இராசகுமார் — பருத்தித்துறை.

★ யு. மேவின்— குருநகர்.

★ எம். குலசேகரம் நாவாந்துறை.

★ எஸ். றெனிசன் றொபேட் — பாசையூர்.

★ ஜொட்டஜீவராஜன் — நாவாந்துறை.

★ ப. அருள்தாஸ் — அல்வாய் கிழக்கு.

★ அன்ரன் றாலிதாஸ் — பொலிகண்டி.

★ ஈ. நிக்கலஸ் — நாவலர் வீதி, நாவாந்துறை.

விடுவிக்கப்பட்ட அனைவரும் அடுத்தவாரம் அளவில் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேருவர் என மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்தார்.

(இ-7)

# மகளின் கதி தெரியாத தாயாரின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம் பெப். 25

இளம் வயது மகள் ஒருவர் கைது செய்யப்பட்டு காணாமற் போனமையினால் சுகயீனமடைந்திருந்த தாயார் ஒருவர் அண்மையில் மரணமானார்.

1996 நடுப்பகுதியில் கொழும்புத்துறை, துரையப்பா மகாவித்தியாலயத்தில் க. பொ. த சாதாரண தர வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தவரான ஆறுமுகம் சிவாஜினி கொழும்புத்துறை கணக்கர் வீதிச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இதனால் மனமுடைந்த தாயாரான திருமதி ஆறுமுகம் தவமணி (50 வயது) உணவு உட்கொள்ளாது இருந்தமையினால் நோயாளியானார் என்றும் —

மகள் விடுவிக்கப்படுவார் என்று கடந்த ஒன்றரை வருடமாக எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த அவர் கடும் நோயாளியாகி மரணமானார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவரின் மறைவு குறித்து கைதானோர் காணாமல் போனோர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துள்ளது.

(இ-5)

# நாடாளுமன்ற உறுப்பினர் சம்பள அதிகரிப்பு நிறுத்தம்

கொழும்பு, பெப். 25

வரவு செலவுத் திட்ட யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு செலவுத்திட்ட யோசனைகளில் எம். பிக்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோரின் சம்பளத்தை அதிகரிப்பது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குத் தற்போது வழங்கப்படும் மாதாந்தச் சம்பளமான 13 ஆயிரத்து 250 ரூபாவை 22 ஆயிரத்து 100 ரூபாவாகவும் பிரதி அமைச்சர் ஒருவருக்கு தற்போது வழங்கப்படும் 17 ஆயிரம் ரூபாவை 28 ஆயிரத்து 700 ரூபாவாகவும் அமைச்சர் ஒருவருக்குத் தற்போது வழங்கப்படும் 17 ஆயிரத்து 500 ரூபாவை 29 ஆயிரத்து 700ரூபாவாகவும் அதிகரிப்பது எனச் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தற்பொழுது அமுல் செய்வது இல்லை என்று அரசு முடிவு செய்திருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

[இ-10]


## ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு பேன், சொடுகு வராது தடுப்பதற்கு, கேசம் பட்டுப்போல் மிளிர்வதற்கு, கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு, கேசத்தை குளிர்ச்சியூட்டுவதற்குத் தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.

சித்த வைத்திய கலாநிதி அவர்கள் வழங்கிய ஆலோசனையின்படி தயாரிக்கப் பெற்றது

**ஆனந்தம்** சீயாக்காய்ப் பவுடர்
கேட்டு வாங்கிப் பயன்பெறுங்கள்.

தயாரிப்பாளர்:
ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்,
ஆசிரமம் அருகில், கைதடி.

(53604)



## வாழ்த்துகின்றோம்

யா/மானிப்பாய்
மெமோறியல் ஆங்கில பாடசாலை
க. பொ. த. (உயர்தரம்)
சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள்

1. க. புவியரசி — 2ABC – வர்த்தகம்
2. மு. கேசவன் — A2BC – கலை
3. க. ஆதித்தன் — AB2C – வர்த்தகம்
4. சு. துரைரத்தினம் — ABCS – கலை
5. தெ. விஜயறூபன் — ABCS – வர்த்தகம்
6. சி. சசிக்குமார் — ABCS – வர்த்தகம்

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்-19

மேற்குறித்த இந்த மாணவர்களை
மனமாரப் பாராட்டி வாழ்த்துபவர்கள்:

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(53628)



## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

''1997 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் அதிசிறப்புப் பெறுபேறுகள் மற்றும் சிறப்புப் பெறுபேறுகள் பெற்ற எமது கல்வி நிலைய மாணவர்கள் சகலரையும் வாழ்த்துகின்றோம்''.

எதிர்வரும் பரீட்சையிலும் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற மாணவர்களைத் தயார்ப் படுத்தும் முகமாக ஆரம்பமாகின்றது.

**A/L 98** துரித மீட்டல் வகுப்பும்
**DAY** வினாவிடை வகுப்புகளும்

கணித, உயிரியல், கலை, வர்த்தக வகுப்புகள்

★ மாணவர்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுவிட்ட எமது வழமையான ஆசிரியர்குழு.

ஆரம்பம்: 28-02-1998
காலை 9.00 மணி

(53626)



## பாலர் ஆசிரியராக..

மேற்படி பயிற்சிபெற க.பொ.த (சாதாரணதர) தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

பாலர்
ஆசிரியர் சங்கம்
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(53588)



## யாழ். BECON

( நெல்லியடி றிறிஸ்ரல் சென்ரல் )

**A/L 98 DAY CLASS**
நடைபெறுகின்றன.

எமது ஆசிரியர் குழு:

பொருளியல் — அன்ரனி
வணிகக்கல்வி — பசில்
கணக்கீடு — D. SAM
தமிழ் — கமலரூபன்
இந்துசமயம், இந்து நாகரிகம் — பிரபல ஆசிரியர்
வணிகப்புள்ளி — தவசேகர்
அளவையியல் — சத்தியசிலன்

வகுப்புகள் ஆரம்பமாகும் நேரம்.
காலை 9 மணி

(சி/2961)



## கலைப்பேரரசு ஏ. ரி. பியின்

நாடக வளர்ச்சி நிதிய ஆதரவில்
குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும்

## தனி நடிப்புப் போட்டி

இரு பிரிவுகள்: கனிஷ்ட பிரிவு (20 வயதுக்குள்) 5 நிமிட நடிப்பு. சிரேஷ்ட பிரிவு (20 வயதுக்கு மேல்) 6 நிமிட நடிப்பு

பரிசு:

| கனிஷ்ட | | சிரேஷ்ட | |
|---|---|---|---|
| முதல் பரிசு: | 500 ரூபா | முதல் பரிசு: | 500 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 300 ரூபா | இரண்டாம்பரிசு: | 300 ரூபா |
| மூன்றாம் பரிசு. | 200 ரூபா | மூன்றாம்பரிசு: | 200 ரூபா |

ஆறுதல் பரிசுகள் 100 ரூபா 10 பேருக்கு

பாத்திரம்;- பெரியபுராணம், இராமாயணம், சாகுந்தலத்தில் இருந்து

விண்ணப்ப முடிவு:- 12 – 03 – 98க்கு முன் அதிபர் / கிராம சேவையாளர் உறுதிப்படுத்திய விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு அனுப்புக.
நிகழ்வு பங்குனி பிற்பகுதியில்
விவரங்களுக்கு தொடர்பு கொள்க.

முகவரி:- ம. சபாரத்தினம், வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில்.
பெயர், விலாசம், பாத்திரம், பிரிவு விவரங்களை விண்ணப்பித்தில் குறிப்பிடுக.

ம. சபாரத்தினம்,
அமைப்பாளர்.

(53625)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்கட்சிகள்பலவந்தமாக நிதி வசூல் செய்யக் கூடாது

## இராணுவத் தலைமை பீடம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 25
தமிழ்க் கட்சிகள் பலவந்தமாக நிதி வசூல் செய்வது குடாநாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் தமிழ்க்கட்சிகளை இராவணுத் தலைமைப்பீடம் அழைத்து இது தொடர்பான அறிவுறுத்தலை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில கட்சிகள் பலவந்தமாக நிதிவசூல் செய்வதாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அத்துடன் யாழ். மாநகர சபைப் பகுதிக்குள் தமிழ்க் கட்சிகள் ஓர் இடத்தில் மட்டுமே அலுவலகம் வைத்திருக்கலாம் என்றும் —

ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அலுவலகம் வைத்திருக்க முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அலுவலகங்களை வைத்துள்ள கட்சிகள் அவற்றை மூட வேண்டிய நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## சிவராத்திரி தினத்தை ஒட்டி படைத்தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25
பலாலியில் உள்ள வட பகுதிப் படைத் தலைமையகம் இன்றைய சிவராத்திரி தினத்தை ஒட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

ஐம்பதாவது சுதந்திரதினப் பொன்விழா வைக் கொண்டாடும் இவ்வருடத்தில் நீங்கள் புனிதமாக உன்னதமாக கொண்டாடும் சிவராத்திரி தினத்தை சமாதான தினமாக்கிக்கொள்வோம். முழு நாட்டுக்கும்தேவையாகஇருக்கும் சமாதானம் உதயமககட்டும் என நீங்கள் பிரார்த்திப்பதை நாம் அறிவோம். உங்களுடனும் எங்களுடனும் ஒன்றாக வாழும் முஸ்லிம்கள் அண்மையில் ரம்ழான் தினத்தை வெகு விமரிசியாக கொண்டாடினார்கள். அவர்

(10 ஆம் பக்கம் பாக்க)

## கீரிமலையில் இன்றிரவு விசேட சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 25
கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவராத்திரியையொட்டி இன்றிரவு விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கீரிமலையில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கவும், கேணியில் நீராடவும் மக்கள் செல்ல வசதியாக இன்றும், நாளையும் தெல்லிப்பழையில் இருந்து பஸ் சேவை நடத்தப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை வரை வட பிராந்திய போக்குவரத்து சபை இன்று நண்பகல் ஒரு மணி முதல் விசேட பஸ் சேவையை ஏற்பாடு செய்துள்ளது.

கீரிமலையில் இன்றிரவு நடைபெறும் நிகழ்ச்சிகளில், ஆறு. திருமுருகனின் சமயப் பிரசங்கமும், இணுவில் என். ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர், தெ. உதயசங்கர்– ஆர். கேதீஸ்வரன் குழுவினர் ஆகியோரின் நாதஸ்வரக்கச்சேரியும், சங்கீதபூசணம், பண்ணிசைவாணர் வி. சிவஞானசேகரம், சி. சிவஞானராசா ஆகியோரின் பண்ணிசை கச்சேரியும் இடம்பெறும்.

(உ–3–139)

## பல ஆலயங்களிலும் இன்று சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். குடாநாட்டில் பல்வேறு ஆலயங்களிலும் இன்று இரவு சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறவிருக்கின்றன.

பல்வேறு இசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும் இடம் பெறும்.

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சத்தியசாயி நிலையம், பருத்தித்துறை சிவன் கோயில், கொழும்புத்துறை மணலியம்பதி அம்மன் — ஐயனார் கோயில், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில், கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் ஆலயம், புங்கன்குளம்வில்லையடி நாகபூசனி அம்மன் ஆலயம், ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்தநயினார் ஆலயம்,கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி ஆலயம், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், அரியாலை சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவற்றில் சிவராத்திரி நிகழ்வுகள்இடம்பெறும்.

பல ஆலயங்களில் நாளை தீர்த்த உற்சவம் இடம் பெறும். (உ–3–30–117–17)

## விபூதிப் புதன் இன்று

நீறுபூத்த எம் மண்ணில் எம் கால்களை ஊன்றி நின்று எம் நெற்றிகளில் திருநீறு பூச இன்றைய திருநீற்றுப் புதன் அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்தவ வாழ்வில் நல்ல அறுவடையைச் சேகரிக்கும் அருளின் காலம் தவக்காலம். மனித உள்ளத்தின் உள் உணர்வுகளைத் தொட்டு ''உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்'' என்று இறைவன் குரலெழுப்பி கைகொடுத்து வழி நடத்தி மானுடத்தை உய்விக்கும் காலம் மனமாற்றத்திற்கு கிடைக்கும் மாபெரும் சந்தர்ப்பம் இக்காலம்.

தவத்தின் அடையாளமாக கிறிஸ்தவர்களின் நெற்றியிலே விபூதி பூசப்படுகின்றது. இக்காலம் தவத்தின் செபத்தின் ஒறுத்தலின் மனமாற்றத்தின் காலமாக இருப்பதனால் இக்காலத்திலே கிறிஸ்தவர்கள் இறையரசிற்காக நோன்பிருத்தல், மாமிசம் தவிர்த்தல், செபித்தல், பகிர்தல் போன்ற நற்செயல்களைக் கடைப்பிடித்து வாழ அழைக்கப்படுகின்றார்கள். இதனுடைய ஆரம்பமாகவே நெற்றியிலே சாம்பல் பூசி ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என்ற வாக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்படுகின்றது. மனந்திரும்புதலின் அவசியம் ஒவ்வொருவருக்கும் உணர்த்தப்படுகின்றது.

எமது உடல்; ஆன்மா முழு வாழ்வையுமே திருப்பி இறைவனின் முகம் நோக்குவோம். அப்போது இறைவன் தரும் செய்தி எமக்கு புரியும். அது மனமாற்றம் என்பதாகவே இருக்கும். மனமாற்றத்திற்கு துணை புரியும் கருவிகளான செபமும், தபமும், உபவாசமும் மழுங்கிப்போகின்ற இக்காலத்திலே மரியன்னையும் தன் காட்சிகள் மூலம் ''உடலுக்கு விரதம் ஆன்மாவிற்கு செபம்'' என்று அழுத்திக் கூறுகின்றான். எனவே உபவாசம், செபம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து இவற்றை மனமாற்றத்தின் சிறந்த ஊடகமாக்குவோம்.

இறைவன் எம்மை பாசத்தோடு மனம் மாற அழைக்கின்றார். இப்பாச அழைப்பிற்கு உள்ளம் திறந்து நாம் என்ன பதில் அளிக்கின்றோம் என்பது இக்காலத்தின் அர்த்தமுள்ள தயாரிப்பில் தான் தங்கியுள்ளது.

கொடிய யுத்தத்தின் ஓடுகின்ற இரத்த வெள்ளத்தில் சேறாகியிருக்கும் எம்மண்ணிலே கால் பதித்து நடக்கின்ற எங்கள் ஒவ்வொருவருக்கும் பல பாவ காயங்கள் உள்ளன. புரையோடிப் போன பல புண்கள் மாற முடியாத பல வடுக்கள் உள்ளன. இவையனைத்தும் மனமாற்றத்தாலேதான் குணமாகும், என்ற உண்மை துலங்குகின்றது.

துருப்பிடித்துப்போன எம் மனங்களை இறைவனின் பாத கமலங்களைக் கட்டிப் பிடிப்பதன் மூலம் தூய்மைப் படுத்துவோம். மனமாற்றத்தின் வெளிப்பாடான செயற்பாடாக இவ்வருட தவக்கால செய்தியிலே திருத்தந்தை கூறுவதுபோன்று ஏழைகளிலும் உதவி தேவைப்படுவோரிலும் கிறிஸ்துவைக் கண்டு கொள்ளுவோம். அவரோடு இணைந்து இத்தவக்கால புனித பயணத்திலே கை கோர்த்து நடப்போம். இதயக்கதவை இறைவனுக்கே திறப்போம்.

அருட்திரு.
செ. யூட். அமலதாஸ்

## ஜப்பான் அதிகாரிகள் வருவர்

கொழும்பு, பெப். 25
யாழ். மாவட்டத்தில் அபிவிருத்திப்பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக நேரில் ஆராய்வதற்காக ஜப்பான் தூதரக அதிகாரிகள் இருவர் எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் அவர்கள் தங்கியிருப்பர். (உ–3)


**A/L 97**
**Day Classes**
ஆரம்பம்: 25–02–98
புதன் காலை 7.00 மணி
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
(49969)


### அறிவித்தல்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கலை, வர்த்தக மாணவர் மன்றத்தால் 25 — 02 — 1998இல் நடத்தப்பட விருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 27 — 04 — 1998 திங்கட்கிழமை பிற்போடப்பட்டுள்ளது.

கலை, வர்த்தக மாணவர் மன்றம்.
[சி/2964]


மீண்டும் யாழ். நகரில்!
முதன்முதலாக மேடையேறுகிறது
**இராஜன்ஸ் இசைக்குழுவின்**
பிரபல பாடகர்கள்
திவாகர், ஸ்ரான்லி
உடன் இசையமைப்பாளர்களும்
இணைந்து வழங்கும்
**இன்னிசை கானங்கள்**
**இராகம்ஸ் இசைக்குழு**
இன்று 25.02.98 புதன்கிழமை இரவு 2.30மணி
யாழ். மானிப்பாய் வீதி,
உதயதாரகை சனசமூக நிலைய முன்றலில்
இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

விளம்பர அன்பளிப்பு:
**ராகம்ஸ் பட்டுச்சோலை**
இல. 24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/2969)


### உதயதாரகை சனசமூக நிலையத்தினர்

நடத்தும் மாபெரும்

**மகா சிவராத்திரி விழா**

காலம்: 25 — 02 — 1998 புதன் இரவு 8 மணி
இடம்: முட்டாஸ் கடை சந்தி அருகில்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதமவிருந்தினர் : திரு. பா. செந்தில்நந்தனன்
(பிரதேசசெயலர், யாழ்ப்பாணம்)

சிறப்புவிருந்தினர்: திரு. ந. லிங்கேஸ்வரன்
(கிராம அலுவலர் ஜே/83, கொட்டடி)

நிகழ்ச்சிகள்:-

- ▲ சிறப்பு சமயச்சொற்பொழிவு
- ▲ மங்கள இசை
- ▲ சங்கீதக் கச்சேரி
- ▲ சின்னமணிகுழுவினரின் வில்லிசை
- ▲ இராஜன்ஸ் குழுவுடன் இராகம்ஸ் குழுவினர் இணைந்து வழங்கும் இன்னிசைகானங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதயதாரகை சனசமூக நிலையத்தினர்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (53644)

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**மு. கா. இராமலிங்கம்**

நயினையில் 02 – 11 – 1997 அன்று பூசலார் நாயனார் சமாதியன்று கங்கையில் சமாதி அடைந்த நயினை அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி திருக்கோயில் மரபு வழி அறங்காவலரும், ஸ்ரீ இராமலிங்கர் இராமச்சந்திர மகிபரின் 21 ஆவது பரம்பரையினரும், சோதிட கலாநிதி ஐயாத்துரை தம்பதிகளது மூத்தமருகரும், சிவபதம் அடைந்த நல்லம்மா அவர்களின் அன்புக் கணவருமான ஸ்ரீமான் மு. கா. இராமலிங்கம் அவர்களது சிவபதச்செய்தியறிந்து வருகை தந்த சிவாச்சார்யப்பெருமக்களுக்கும், உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து வருகை தந்த உறவினர், நண்பர்கட்கும் 28–02–98 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்தியிலும், கலந்து கொள்ளும் அனைவர்க்கும் அன்னாரின் குடும்பம் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
கா. இ. சண்முகலிங்கம்
(மகன்)
சி. ஆ. கணபதிப்பிள்ளை
(மருமகன்)

சிவகாம கோட்டம்,
நயினை – 5.
(53641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் திகதி தொடக்கம் யாழ்.மாநகரசபைஇயங்கும்?

கொழும்பு, பெப். 25
தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாநகர சபை நிர்வாகம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சம்பிரதாயபூர்வவாக இயங்கத்தொடங்கும் என இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

மாநகரசபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த நிதி, திட்டமிடல், சுகாதாரம், அபிவிருத்தி எனத் தனித்தனியே நான்கு குழுக்கள் உருவாக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபைப் பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி மற்றும் பொருளாதார உதவிகளை ஐக்கிய நாடுகள்சபை, நெதர்லாந்து, சுவிஸ்சர்லாந்து ஆகியன வழங்க முன்வந்திருப்பதாகவும் இலங்கை வானொலி குறிப்பிட்டது.

(உ–7)

# கப்பல் கட்டணம் ஏதுமின்றி வெங்காயம் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்து கப்பல் கட்டணமின்றி கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஒரு கிலோ வெங்காயம் 22 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. யாழ். மாவட்ட சந்தைகளில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்து வருவதையடுத்தே யாழ். அரச அதிபர் கொழும்புக்கு வெங்காயத்தை அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

மாவட்ட விவசாய உற்பத்தி, நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம் மூலம் விவசாயிகளிடமிருந்து போதியளவு வெங்காயம் கொள்வனவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெங்காயக் கொள்வனவுக்கென ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

(உ–5)

## 20 பேருக்கு பிணை அனுமதி!

திருகோணமலை, பெப். 25
திருகோணமலை தம்பலகமம் பாரதிபுரம் கிராமத்தில் அண்மையில் 8 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த 41 படையினரில் 20 பேர் பிணையில் செல்ல திருகோணமலை நீதிவான் பி. சொர்ணராஜ் அனுமதி வழங்கினார்.

ஏனையோரைதொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(உ–21–3)

## சொத்தி உபாலியின் சகா சுட்டுக் கொல்லப்பட்டார்

பொரளை கொட்டாவ வீதியில் மோட்டார்சைக்கிளில் சென்றோர்மீது வானில் சென்றோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார்.

நேற்றுக்காலை 10.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நந்தனகருணதிலக என்பவரே உயிரிழந்தவராவார்.

பல வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்ட சொத்தி உபாலியும் மோட்டார்சைக்கிளில் சென்றார் என்றும்—

அவர் எவ்வித ஆபத்தும் இன்றி தப்பி விட்டார் என்றும்—

அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரே உயிரிழந்தார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(உ-3–7)

## லொறிச் சாரதி, கிளீனர் மட்டு. பொலீஸாரால் கைது!

மட்டக்களப்பு, பெப்: 25
மட்டக்களப்பு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முயன்ற அரசடித்தீவு ப. நோ. கூ. சங்கம் லொறி சாரதியும், கிளினரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பற்றறி, என்ஜின் ஒயில், பற்றறி சார்ஜர் 'டிஸ்டில் வாட்டர்' போன்றன இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு இவர்கள் மறைத்து வைத்துக்கொண்டு செல்ல முயன்றதாகக் கூறப்படுகின்றது.

கிடுகு மட்டைக்குள் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தனவாம்.

கொக்கட்டிச்சோலைக்கு பட்டிருப்பு 'பாலம் வழியாக லொறி சென்ற சமயம் பொலீஸ் சோதனையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

(உ–21)

## மா மரங்கள் பூக்க மருந்து தெளியுங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 25
மா மரங்கள் பூப்பதற்கும் பிஞ்சுகள் உதிராமலிருப்பதற்கும் தற்போது மருந்து தெளிக்க வேண்டிய காலமாக இருப்பதால் விவசாய கமநல சேவை நிலையங்களுடன் மாமரச் செய்கையாளர்கள் தொடர்பு கொண்டு மருந்து தெளிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் மா மரங்கள் பூப்பதற்கும் பிஞ்சுகள் பிடிப்பதற்கும் உரிய காலமாகும்.

பூ உதிர்வு, பிஞ்சு உதிர்வு ஆகியவற்றைத் தடுப்பதற்கு மருந்து தெளிக்கப்படவேண்டும்.

நல்லூர், சாவகச்சேரி, உடுவில், புலோலி, வேலணை போன்ற கமநல சேவை நிலையங்களில் மூலதன ஒதுக்கீட்டு நிதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தெளி கருவிகள் விவசாயிகளின் தேவைக்கென பயன்படுத்தும் நிலையிலுள்ளன.

மேற்படி கமநல சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு மாமரங்களுக்கு மருந்து தெளித்து மாம்பழ உற்பத்தியைப் பெருக்குமாறு மா மர செய்கையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

[இ–5]

## நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், பெப். 25
விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில்கைதாகி யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்றநீதிவான் பா.பாலச்சந்திரன் உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலீஸார் வேலும் மயிலும் தவக்குமார் என்ற இளைஞனைப் பொலீஸார் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்தனர்.

(உ–5)

## மீனவருக்கு அனுமதி மறுப்பு

பருத்தித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல்கள் தாக்கப்பட்டதை அடுத்து அங்கு கடந்த இரு நாள்களாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(உ–173)

### முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்)
யரசர் பத்மநாதனை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பத்மநாதன் சார்பில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி சாளிய பீரிஸ் ஆஜராகியிருந்தார்.

செல்லையா பத்மநாதன் 1990 ஆம் ஆண்டு முதல்யாழ். மாவட்டத்தில் நிலவிய இக்கட்டான நிலையில் திட்டப் பணிப்பாளராகவும், பின்னர் அரச அதிபராகவும் பணியாற்றி மக்களுக்கு பல்வேறுபட்ட வழிகளில் உதவி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ–3–7–21)

### மாங்குளத்தைப்....

(முதலாம் பக்கத் தொடர்)
காயமடைந்த மேலும் படையினர் வவுனியா ஊடாக அம்புலன்ஸ்களில் அநுராதபுரம் ஆஸ்பத்திக்கு விரைந்து எடுத்துச் செல்லப்பட்ட வண்ணம் இருந்தனர்.

''வெற்றி உறுதி'' படை நடவடிக்கைகளில் ஈடுபடும் துருப்புக்கள் அண்மைக் காலத்தில் புளியங்குளம், கனகராயன்குளம் பகுதிகளைச் கைப்பற்ற எடுத்த நடவடிக்கைகளின் போது மேற்கொண்ட தாக்குதல்களின் சத்தங்கள் வவுனியாவுக்குக் கேட்டிருக்கவில்லை. ஆனால் தற்போது அதற்கும் வடக்கேயுள்ள மாங்குளத்தைக் கைப்பற்ற படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையின் போது ஏவப்படும் ஷெல்களின் சத்தங்கள் நேற்று வவுனியா வரை கேட்டன.

படையினர் தமது ஆட்லறிகளின் பாதுகாப்புக் கருதி தற்போது அவற்றைதெற்கே ஓமந்தைக்கு பின்னகர்த்தி அங்கிருந்து யுத்த முனை நோக்கி ஆட்லறிகளை ஏவுவதால், அப்படி ஏவும் ஆட்லறிகளின் சத்தம் வவுனியாவுக்குக் கேட்பதாகக் கூறப்பட்டது, (உ–3–10–21–164)

### சிவராத்திரி...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)
களும் நீங்களும் நாங்களும் அத்தருணத்தில் ஒன்றுசேர்ந்தோம்.

சிலதினங்களுக்கு முன் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வெகுவிமரிசியாக – ஆடம்பரமாக – நமது 50 ஆவது ஆண்டு சுதந்திரதினவிழாவை கொண்டாடினோம்; நாம் அனைவரும் ஒன்றிணைந்து உவகை அடைந்தோம். அந்த நட்புக்கு– ஒற்றுமைக்கு– மகிழ்ச்சிக்கு- களங்கம் விளைவிக்க எவருக்கும் இடம் அளிக்க வேண்டாம்.

இந்த நாடு இந்த முறையில் சமாதானத்துடன் திகழ்வதை விரும்பாத சிலரும் நம்மிடையில் இருப்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இதில் முக்கியகுழுவினராவர். அவர்கள் இத்தினங்களில் ஏதாவது பயங்கரவாத - நாசகார - வேலைகளில் ஈடுபட முனைவார்கள்; நீங்கள் உவகையுடன் சமாதானத்துடன் கொண்டாடும் இந்த சிவராத்திரி தினத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நம் மத்தியில் பாய்ந்து ஏதாவது நாசகார – பயங்கரவாத – வேலைகளில் ஈடுபட வாய்ப்புண்டு. சமாதானத்துக்கு இடையூறு விளைவிக்க இடமளிக்க வேண்டாம். இத்தினத்தை சமாதான தினமாக்கிக்கொள்வோம். நற்புறவுள்ள தினமாக்கிக்கொள்வோம்,

உங்களது நட்புறவுடன் ஒற்றுமையுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம். உங்கள் அனைவருக்கும் புனித சுப சிவராத்திரி தினமாகட்டும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### கட்டுவன்....

(முதலாம் பக்கத் தொடர்)
பலியானதாகவும் —

இரு கான்ஸ்டபிள்களும், இரு ஊர்காவலர் உட்பட ஐவர் காயமடைந்ததாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ–3–7–8–21)

### ஊடுருவல்...

(முதலாம் பக்கத் தொடர்)
தல் மேற்கொண்டனர். ஆனால் ஊடுருவ முயன்றவர்கள் குறித்து துப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. இச்சம்பவத்தினால் துறைமுகத்துக்குள் கப்பல்கள் நுழைவது இரு மணி நேரம் நேற்றுத்தடைப்பட்டது. (உ–21)

### கரிப்பட்டமுறிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்)
அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வானொலி அறிவித்தது.

இச் சண்டையில் இசைமாறன் (சுந்தரலிங்கம் கிருபாகரன்—யாழ்ப்பாணம்), நெல்லன் (கிட்டிணபிள்ளை துரைராசா—யாழ்ப்பாணம்), குலசேகரன் அல்லது குமாரவேல் (நல்லதம்பி சுதாகரன் — யாழ்ப்பாணம்), கேசவன் அல்லது சங்கரன் (செல்வராசா தங்கராஜ்—யாழ்ப்பாணம்), உதயன் (தங்கராசா கஜந்தகுமார் — யாழ்ப்பாணம்), திரைவாசன் அல்லது அழகறிஞன் (மார்க்கண்டு பரமேஸ்வரன் — யாழ்ப்பாணம்) ஆகிய ஆறுபேர் தமது தரப்பில் களப்பலியாகினார்கள் என்றும் 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (உ–3)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு 1997/98

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1997/98 ஆம் கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்கள் இடமிருந்து 29–05–1998 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கைநெறி
3. பொதுக்கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி பகுதி 1 கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

விண்ணப்பப்படிவம் ரூபா 15-00

பாடத்திட்டமும் விதிமுறைகளும் (முதற்கலை/முதல் வர்த்தக நெறிகளுக்கானது) ரூபா 35–00

பாடத்திட்டம் (சிறப்புக் கலைமாணி, வர்த்தகமாணி பகுதி 1 பாடநெறிக்கு) ரூபா 50–00

பாடத்திட்டம்(பொதுக்கலைமாணி பகுதி 1 ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும்) ரூபா 15–00

விதிமுறைகள் – கைநூல் (சகல பகுதி 1 பாடநெறிகளுக்கும்) ரூபா 25–00

விண்ணப்பப் படிவத்தையும், பாடத் திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை/கற்க விரும்பும் பாடங்களைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 11–00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ.மீற்றர் அளவுடைய தபால் உறையினை அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:
1996 / 97 கல்வி ஆண்டிற்குப் பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

-- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
(சி/2963)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் மனையில் 25 – 02–98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org